**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.பிரபு **PW–52** தொழில் –

த/க பெயர் –ஏகாம்பரம் வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(17–ம் எதிரி ஆஜர், மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது ஒசூரில் குடியிருந்து, மினர்வா கிராபிக்ஸ் என்ற பெயரில் ரப்பர் ஸ்டாம்ப் மற்றும் பிரிண்டிங் சம்பந்தமான தொழில் செய்து வருகிறேன். நான் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக அந்த தொழிலை செய்து வருகிறேன். நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி தொழிலை யாரிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன் என்றால் ஜீவா ப்ராசஸ் என்ற தொழில் ஸ்தாபனம் நடத்தி வந்த ஜீவானந்தம் என்பவரிடம் நான் கற்றுக் கொண்டேன். மேற்படி ஜீவானந்தத்தின் மகன் பெயர் என்னவென்றால் ஏஞ்சலஸ் ஆகும். நான் ஜீவானந்தத்திடம் தொழில் கற்றபோது ஏஞ்சலஸ் ஊரில் இல்லை, அவர்

Digitally signed by K KRISHNA PRIYA

வெளிமாநிலத்தில் எங்கேயோ வேலை பார்த்து வந்தார், கல்கத்தாவில் வேலை பார்த்து வந்ததாக சொல்லியுள்ளார்கள். அவர் கல்கத்தாவில் என்ன வேலை பார்த்து வந்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது. என்ன வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் டிஎன்பிஎஸ்சி வினாத்தாள் லீக் ஆனது சம்பந்தமான வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக காவல்துறை சிபிசிஐடி துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார் என்றால் ஆமாம். அவரிடம் எனக்கு தெரிந்த விவரங்களை நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

ஒசூர் தாலுகா கம்பைநல்லூர் வி.எம்.ராசு என்பவர் மகன் சாட்சி அருள் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு அவரை நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தற்போது அவரை தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏஞ்சலஸ் என்பவர் கல்கத்தாவில் ஒரு பிரஸ்ஸில் தமிழ் டைப்பிங் வேலை செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். மேற்படி ஏஞ்சலஸ் தனக்கு பதிலாக கல்கத்தாவில் தமிழ் டைப்பிங் தெரிந்த வேலை செய்வதற்கு ஒரு ஆள் தேவை என என்னிடம் கேட்டார் என்றால் ஆமாம் கேட்டார் ஆனால் எனக்கு தெரியாது என்று நான் சொன்னேன். எனக்குத் தெரிந்த நபர் உள்ளார் என்று நான் அவரிடம் சொல்லி ஏஞ்சலஸ்–க்கு

மேலே சொன்ன ராசு மகன் அருளை அறிமுகம் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அருளை அறிமுகப்படுத்தி அருளை ஏஞ்சலஸ் அவர் வேலை பார்த்த பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலைக்கு சேர்த்து விட்டார் என்றால் சரியல்ல, இந்த விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. அருள் வேலைக்கு சேர்ந்த பின்பு ஊருக்கு வந்தபோது அவருக்கு அந்த வேலை பிடிக்கவில்லை என்று என்னிடம் சொன்னார் என்றால் அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை. அதன் பின்னிட்டு ஒசூரில் அருளை நான் பார்த்தேன் என்றால் அதன் பின்னர் நான் அவரை பார்க்கவே இல்லை. அவ்வாறு பார்த்தபோது அவருக்கு கல்கத்தாவில் உள்ள வேலை பிடிக்காததனால் திரும்பி ஊருக்கு வந்ததாக அவர் சொன்னார் என்றால் சரியல்ல, அதன் பின்னர் நான் அவரை பார்க்கவே இல்லை. மேலும் அவர் வேலை பார்த்த பிரஸ்ஸின் உரிமையாளர் எம்.டி குண்டு மற்றும் அவருக்கு வேண்டப்பட்ட நபரான கேத்ரா மோகன் மந்தன் ஆகியோர்கள் 12.08.2012 தேதியில் நடைபெற்ற குரூப் 2 வினாத்தாளை தேர்வுக்கு முன்பே வெளியிட்டு பணம் சம்பாதித்தார்கள் என்றும் அது வெளியே தெரிந்து விடும் என்ற காரணத்தினால் தமிழ்நாட்டைச் சேர்ந்த தன்னையும், ராஜேந்திரன் என்பவரையும் வேலையை விட்டு நிறுத்திவிட்டார்கள் என்று அருள் என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. இந்த விபரத்தை போலீஸ் இடம் சொல்ல வேண்டியது தானே என்று அருளிடம் நான் கேட்டபோது அவர் அந்த இடத்தில் இருந்து உடனே கிளம்பி சென்று விட்டார் என்றால் சரியல்ல அருளை நான் பார்த்ததே இல்லை. இந்த விவரத்தை வெளியே நான் சொன்னால் எனக்கு பிரச்சனை வரும் என்று எண்ணி நான் சொல்லாமல் இருந்து விட்டேன் என போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1-ம் மற்றும் 2-ம் எதிரிகள் கேட்டுக் கொண்டதனால் அவர் யார் என்று எனக்குத் தெரியாது

Digitally signed by K KRISHNA PRIYA

என்றும் அவரை நான் ஏஞ்சலஸ் என்பவருக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அருள் சொல்லி இந்த வழக்கு சம்பந்தமான விபரங்களை நான் கேள்விப்பட்டுள்ளேன் என்றும் ஆனால் தற்போது 1-ம் மற்றும் 2-ம் எதிரிகளுக்கு ஆதரவாக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4, 6 முதல் 30-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Digitally signed by K KRISHNA PRIYA